1992 பிப்ரவரி 7]

பர்மனெட் தொழிலாளர்களும், 74 தற்காலிகத் தொழிலாளர்களும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் 5 சதவீத பருத்திதான் உற்பத்தியாகிறது. 5 சதவீதத்திலேதான் ஒரு பகுதி அந்தியூரில் உற்பத்தியாகிறது. ஆதலால், இந்த கேள்விக்கே இடமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு நிறைந்தவராய், நாண் நிறைந்தவராய், ஒப்புரவு நிறைந்தவராய், கண்ணோட்டம் நிறைந்தவராய், வாய்மை நிறைந்தவராய், கல்வி, கேள்விகளில் சிறந்தவராய், அறிவால் உயர்ந்தவராய், ஆக்கத்தால் மேம்பாடு அடைந்தவராய், தனக்கென்று வாழாமல் தமிழ்ச் சமுதாயத்திற்காக, தாழ்த்தப்பட்ட என்னைப்போன்ற மக்களுக்காக இரவென்றும் பகலென்றும் பாராமல், கண் துஞ்சாது உழைக்கின்ற ஒப்பற்ற தலைவியினுடைய ஆட்சியில் அவர்கள் இல்லை என்று சொல்லாமல், இந்த ஆண்டு —வேண்டாம், வேண்டாம்—அடுத்த ஆண்டிலாவது ஆரம்பிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவி நடையோடு எடுத்துரைத்தார். அடுத்த ஆண்டுதான் நம்முடைய ஒப்பற்ற தலைவி நம்மைப் போன்ற சாதாரணமானவர்களுக்கு விலாசத்தைத் தந்து தங்கள் சட்டமன்றத் தொகுதியில் தான் அன்னையின் பெயரால் நூற்பாலை துவக்க இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு தற்போது இடமில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், பஞ்சு விலை ஏறத்தாழ இரட்டிப்பு மடங்கு உயர்ந்திருக்கிறது. நாம் நூற்பாலை நடத்துவதே மிகக் கடினமாக இருக்கிறது. ஆதலால், மறுபடியும் பரிசீலிப்பதற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 90. திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

90—

அசுவமாநதி கோம்பை அணைத்திட்டம்.

*263 திருமதி இரா. பாண்டியம்மாள்

மாண்புமிகுபொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகிலுள்ள அசுவமாநதி கோம்பை அணைத்திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இத்திட்டம் தற்போது ஆய்வில்இல்லை.

முற்பகல் 10–10

திருமதி இரா. பாண்டியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதி பின்தங்கிய, வறட்சி, மிக்க தொகுதி. தொழில் வளம் குறைந்த தொகுதி. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அதிகம் வாழ்கின்றார்கள். 40 ஆண்டுகளுக்குப் பின் புரட்சித் தலைவி அவர்கள் மீது கொண்ட அன்பினாலும், பாசத்தினாலும் என்னை அ.தி.மு.க.வின் சார்பாக தேர்ந்தெடுத்துள்ளார்கள். அசுவமாநதித் திட்டம் என்பது மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து மழைக்காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து வந்து இந்த நதியினால் பெரும் ஆபத்துக்குரிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், இந்த நதித் திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றித் தந்தால் 3,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் அடையக்கூடிய ஒரு சூழ்நிலையில் உள்ளதால் இந்தத் திட்டத்தை என்னுடைய அன்புத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றி தரும்படி அவர்களுடைய பாதங்களைத் தொட்டு, பேரவைத் தலைவரின் சார்பாக பணிவுடன் கேட்டுக் கொண்டு இந்தத் திட்டம் அடுத்த ஆண்டிலாவது அல்லது இந்த ஆண்டிலே யாவது பரிசிலனை செய்ய வேண்டும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் மூலமாக என்று சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் அசுவமாநதியில் கோம்பையில் அணைக்கட்டு கட்டும் திட்டத்திற்காக நீர் அளவுகளின் ஆய்வுகள் எடுக்கப்பட்டு வருகிறது. நீர் அளவு விவரங்களை 1991-92ஆம் ஆண்டு சேகரித்து அதன் பின்னர் இத்திட்டம் 1992-93ஆம் ஆண்டில் விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. அந்த ஆய்வுகள் முடிந்ததற்குப் பின்னாலே அரசின் கவனத்திற்கு இந்தத் திட்டம் கொண்டுவரப்படும். அதற்குப் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்தப் பேரவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 91, திரு. ஞ. லாரன்ஸ், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.